# சைவசமய குரவர்

நாம் இன்று சைவசமயிகளாகத் திகழக் காரணமாக இருந்தவர்கள் நால்வர். இவர்களைச் சைவசமயகுரவர் என்கிறோம். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமய குரவர் ஆவர். இவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். சிவத் தலங்கள் தோறும் சென்று இறைவனை வணங்கிப் பாசுரங்கள் பாடியவர்கள். சைவசமயத்தின் உண்மையை நிலைநாட்டியவர்கள். இறையருளால் பல அற்புதங்களைச் செய்தவர்கள். சமய குரவருள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரப் பதிகங்களைப் பாடியமையினால் தேவார முதலிகள் என்றழைக்கப்படுகின்றனர். மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றை இயற்றித் தந்துள்ளார்.

## திருஞானசம்பந்தர்



திருஞானசம்பந்தர் சோழவள நாட்டிலே சீர்காழி என்னும் ஊரிலே பிறந்தார். தந்தையார் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதியார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆளுடைய பிள்ளையார். அவர் மூன்று வயதிலே உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டார். அதனால் ஞானசம்பந்தர் என்றழைக்கப்பட்டார். அவர் தமது மூன்றாவது வயதிலே 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமான் குழந்தையான சம்பந்தருக்கு பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை என்பவற்றைக் கொடுத்தருளினார். திருஞானசம்பந்தர் சிவபெருமானுடைய அருளினாற் பல அற்புதங்களைச்

செய்தார். முயலகன் என்னும் நோயை நீக்கியமை, பாண்டியனின் வெப்புநோய் போக்கியமை, பாம்பு தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தமை, படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியமை. திருமறைக் காட்டிலே திருக்கதவு மூடப் பாடியமை, பூம்பாவையை உயிர்ப்பித்தமை முதலியனவாகும். இவர் அருளிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளுள் அடங்குகின்றன. இவரை ஆளுடைய பிள்ளையார், முத்தமிழ்விரகர், சைவசிகாமணி எனவும் அழைப்பர்.

## திருநாவுக்கரசர்



திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர் என்னும் ஊரிலே திருநாவுக்கரசர் பிறந்தார். தந்தையின் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார். அவரின் தமக்கையின் பெயர் திலகவதியார். திருநாவுக்கரசர் சைவ சமயத்தை விட்டுச் சிலகாலம் சமண சமயத்திற் சேர்ந்திருந்தார். திலகவதியார் தனது தம்பியாரை மீண்டும் சைவசமயத்திற்குக் கொண்டு வரும் பொருட்டுச் சிவபெருமானைப் பிரார்த்தித்தார். திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் ஏற்பட்டது. அந்நோயின் கொடுமையைத் தாங்க இயலாது தமக்கையாரிடம் வந்தார். திலகவதியார் திருநீறு கொடுத்துச் சூலை நோயைத் தணித்தார். திருநாவுக்கரசர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவினார்.

திருநாவுக்கரசர் இறைவனிடமிருந்து பொதிசோறு பெற்றார். அவர் இறையருளால் பல அற்புதங்களைச் செய்தார். பாம்பு தீண்டிய மைந்தனை உயிர்ப்பித்தார். பஞ்சம் போக்கப் படிக்காசு பெற்றார். திருமறைக்காட்டு

ஆலயத்தின் கதவு திறக்கப் பாடினார். அவர் முதலாவதாக "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். அவரின் மறுபெயர்கள் வாகீசர், அப்பர், உழவாரப் படையாளி, தாண்டகவேந்தர் என்பனவாகும். திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாந் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## சுந்தரர்



திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் ஊரிலே சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்தார். இவருடைய தந்தையார் பெயர் சடையனார். தாயார் பெயர் இசைஞானியார். சுந்தரருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர். அவர் சிறுகுழந்தையாக இருக்கும்போது நரசிங்கமுனையர் என்னும் மன்னரால் செல்வச் செழிப்போடு வளர்க்கப்பட்டார். திருமணப் பருவம் அடைந்த அவர் மணக்கோலத்தோடு கல்யாணப் பந்தலில் நிற்கும் போது, சிவபெருமான் பிராமண வடிவத்தோடு எழுந்தருளி சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார்.

சிவபெருமான் சுந்தரருக்குப் பொதிசோறு கொடுத்தார்; நெல்லைப் பெற்றுக் கொடுத்தார்; செங்கட்டிகளைப் பொன்கட்டிகளாக மாற்றினார்; பரவையாரிடம் தூது சென்றார். சுந்தரர் இறையருளால் முதலை உண்ட பாலகனை மீட்டார். அவரின் மறுபெயர்களாவன வன்றொண்டர், தம்பிரான் தோழர் என்பனவாகும். அவர் முதலாவதாக "பித்தாபிறை சூடி"... எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். அவரால் பாடப்பட்ட தேவாரங்கள் ஏழாந் திருமுறைக்குள் அடங்குகின்றன.

## மாணிக்கவாசகர்



பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரிலே மாணிக்கவாசகர் பிறந்தார். அவரின் தந்தையார் பெயர் சம்புபாதாசிரியர். தாயார் பெயர் சிவஞானவதியார். திருவாதவூரிலே பிறந்தமையால் 'திருவாதவூரர்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். அவரது அறிவுத் திறத்தையும், பெருமையையும் அறிந்த அரிமர்த்தன பாண்டிய மன்னன் தன் முதல்மந்திரியாக அமர்த்திக் கொண்டான். மந்திரிப் பதவியிலிருக் கும்போது ஒருநாள் குதிரைகள் வாங்கச் சென்றார். வழியிலே திருப்பெருந் துறையிலே குருந்த மரநிழலிலே சிவபெருமானால் ஆட்கொள்ளப் பட்டார்.

மாணிக்கவாசகர் இறையருளால் தனக்கு வந்த சோதனைகள் அனைத்தையும் வென்றார். சிவபெருமான் அவருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டார். தில்லைச் சிதம்பரத்தில் இறைவனோடு கலந்தார். அவரின் மறுபெயர்கள் மணிவாசகர், கோவைவேந்தன் என்பனவாகும். மாணிக்கவாசகரே திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எமக்குத் தந்தருளினார்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமயத்திற்கு ஆற்றிய அளப்பரிய தொண்டின் காரணமாகச் சமயகுரவர் எனவும், சமயாசாரியார் எனவும் அழைக்கப்படலாயினர். அவர்கள் இறைவனோடு இணைந்த தினங்களே அவர்களின் குருபூசைத் தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன.


S. P. C. 120288

சமயகுரவரின் குருபூசைத் தினங்கள் பின்வருமாறு அமைகின்றன:

| | | |
|---|---|---|
| திருநாவுக்கரசர் | - | சித்திரைச்சதயம் |
| திருஞானசம்பந்தர் | - | வைகாசி மூலம் |
| சுந்தரமூர்த்தி | - | ஆடிச்சுவாதி |
| மாணிக்கவாசகர் | - | ஆனிமகம் |

சைவசமய குரவர்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். நால்வர் காட்டிய வழியை எப்பொழுதும் பின்பற்றி வாழ்வோம்.

**நால்வர் காட்டிய வழியில் நாமும் நடப்போம்.**

## பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுங்கள்.**

(1) சைவசமய குரவர்கள் யார்?
(2) தேவாரமுதலிகள் என அழைக்கப்படுபவர்கள் யாவர்?
(3) மாணிக்கவாசகர் இயற்றிய நூல்கள் எவை?
(4) ஆளுடைபிள்ளையார் 'ஞானசம்பந்தர்' எனப் பெயர் பெற்றமைக்கான காரணம் என்ன?
(5) திருஞானசம்பந்தர் "தோடுடையசெவியன்" என்னும் தேவாரத்தை எத்தனையாவது வயதில் பாடினார்?
(6) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் யாவை?
(7) மருணீக்கியாருக்கு ஏன் சூலை நோய் ஏற்பட்டது?
(8) மருணீக்கியாரின் சூலைநோய் எவ்வாறு தணிந்தது?
(9) திருநாவுக்கரசர் செய்த அற்புதங்கள் யாவை?
(10) சுந்தரமூர்த்தி நாயனார் எச்சந்தர்ப்பத்தில் தடுத்தாட்கொள்ளப்பட்டார்
(11) சுந்தரமூர்த்தி நாயானார் செய்த அற்புதங்கள் யாவை?
(12) திருவாதவூரருக்குப் பாண்டிய மன்னரால் என்ன பதவி வழங்கப்பட்டது
(13) மாணிக்கவாசகர் எங்கு, யாரால் ஆட்கொள்ளப்பட்டார்?
(14) சமயகுரவர் நால்வரினதும் குருபூசைத் தினங்களைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

* சமயகுரவர் ஒவ்வொருவரினதும் தாய் தந்தை பெயர், பிறந்த ஊர், செய்த அற்புதங்கள் என்பவற்றை உள்ளடக்கும் ஒரு சிறு புத்தகம் ஆக்குங்கள்.